மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நேரு ஸ்டேடியத்தில் உள் விளையாட்டரங்கம் கட்டும் பணிக்கு டெண்டர் விடுவதிலே கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டு, இடையில் ஒருவர் வழக்கு மன்றத்திற்குச் சென்றார். அந்த வழக்கு இப்போது முடிவுக்கு வந்திருக்கிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் அதைத்தான் சொன்னார்கள். மிக விரைவில், அந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

23—

தெரு விளக்கு

***30389—திரு. கே. எஸ். மூர்த்தி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமத்தி–வேலூர் தொகுதி, பரமத்தி பேரூராட்சி, 1–வது வார்டு, மாதேசம்பாளையம் கிராமம், மாவுரெட்டி மேற்குத் தெருவிலிருந்து கிராம எல்லை வரை மின் கம்பத்துடன் கூடிய தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற கேள்வி, உள்ளாட்சித் துறையிடம் கேட்கப்பட வேண்டிய கேள்வி என்று நினைக்கின்றேன். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பரமத்தி பேரூராட்சி, 1–வது வார்டு, மாவுரெட்டி மேற்குத் தெருவிலிருந்து மாதேசம்பாளையம் ஊர் எல்லை வரை தெரு விளக்கு அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள்.

2019 ஜூலை 3]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருடனோ அல்லது அந்தப் பேரூராட்சி நிருவாகத்துடனோ பேசி, உடனடியாக மின்சாரத் துறைக்கு அந்தத் தொகையைக் கட்டுவார்களென்று சொன்னால், உடனடியாக அங்கு தெரு விளக்கு அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.*

திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். பரமத்தி பேரூராட்சிக்குட்பட்ட மாதேசம்பாளையம் 1–வது வார்டு பகுதி, மாவுரெட்டியிலிருந்து 2 கிலோ மீட்டர் தூரத்தில் சுமார் 60 குடும்பங்கள் வசிக்கின்ற பகுதி. மாவுரெட்டி மேற்குப் பகுதியிலிருந்து மாதேசம்பாளையம்வரை மின்கம்பங்களோ, மின் இணைப்புகளோ இல்லை. விண்ணப்பத்தையும், தொகையையும் செலுத்தினால்கூட அந்தப் பணியைச் செய்வதற்கு மிகவும் காலதாமதப்படுத்துகிறார்கள். அதனால் மின்கம்பங்களுடன் தெரு விளக்கையும் மின்சார வாரியத்தின்மூலம் அமைத்துக் கொடுக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குண்டான தொகையைக் கட்டினால், ஒரே வாரத்தில் தெரு விளக்கை அமைத்துத் தருவதற்குண்டான நடவடிக்கையை எடுக்கின்றேன். மின்சார வாரியமே பணத்தைக் கட்டி தெரு விளக்கை அமைத்துக் கொடுப்பதற்கு சட்டத்தில் இடம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். நான் சனிக்கிழமை வருகின்றபொழுது வேண்டுமானால், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் நேரடியாகச் சென்று அதற்குண்டான நிதியைக் கட்டினால், அதற்குண்டான ஏற்பாட்டைச் செய்கின்றோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2019 ஜூலை 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.*

திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிப் பகுதிகளில் ஒரு கம்பம், இரண்டு கம்பம் என அமைக்கக்கூடிய சூழ்நிலையில் தெரு விளக்குகள் அமைப்பதில் தொடர்ந்து சிரமங்கள் ஏற்படுகின்றன. கடந்த 3 ஆண்டுகளாக 5, 6 இடங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியை ஒதுக்கீடு செய்தும்கூட, இன்னும் பணிகள் சரிவர நடக்கவில்லை. இதுபோன்று உள்ளாட்சித் துறை நிருவாகமும், மின்சாரத் துறை நிருவாகமும் இணைந்து சரிவர செய்யாத காரணத்தினால், மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். விண்ணப்பம் கொடுக்கும்பட்சத்தில் மின்கம்பம் அமைத்து, தெரு விளக்கு அமைக்கும் பணியின் செலவை மின்சார வாரியமே ஏற்று நடத்த வேண்டும். இல்லையென்று சொன்னால், அந்தப் பணியை ஒப்பந்ததாரர் மூலமாகவே விரைந்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்ததாரர் தேவையில்லை. நம்முடைய மின்சார வாரியத்திலே போதிய பணியாளர்கள் இருக்கின்றார்கள். உள்ளாட்சித் துறை அதற்குண்டான தொகையைக் கட்டுமென்று சொன்னால், நாங்கள் ஒரு வார காலத்திற்குள்ளேயே, ஒரு கம்பம், இரண்டு கம்பம் என இருக்கும் பணிகளை எல்லாம் விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கின்றோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள்.*

திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருவொற்றியூர் தொகுதியிலே, தொடர்ந்து 2, 3 மாதங்களாக இருந்து வரும் மின்சார வெட்டினால் பிரச்சினை மிக அதிகமாக, மோசமான நிலையில் உள்ளது. கடந்த 10 நாட்களாக தொடர்ந்து 4 மணி நேரம், 5 மணி நேரம் மின்சாரம் இல்லை. இப்பொழுது நான் நம்முடைய அவைக்கு வருகின்ற நேரத்தில்கூட*

2019 ஜூலை 3]

காலையிலிருந்து மாலை வரை மின்சாரம் இருக்காது என்று மின்சாரத் துறையினர் அறிவிப்பு செய்திருக்கின்றார்கள். நான் அங்கேயிருக்கக்கூடிய மின்சாரத் துறை அதிகாரிகளை அணுகிப் பேசுகின்றபோது, திருவொற்றியூரில் கேபிள்களைப் பதித்து 20 ஆண்டுகளுக்கு மேலாக ஆகிவிட்டது. இதுவரையில் கேபிள்கள் மாற்றப்படாத காரணத்தால், இதுபோன்ற நிலைமை ஏற்படுகிறது என்று அந்த அதிகாரிகளே என்னிடம் தெரிவிக்கின்றார்கள். நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். சென்ற வருடம் இதேபோன்ற கேள்விக்கு எனக்கு வாய்ப்பளித்தீர்கள். கேட்டேன், அப்போதிருந்த பிரச்சினையை எடுத்துச் சொன்னேன். உடனடியாக செய்து தருவதாகச் சொன்னார்கள். ஆனால் ஓராண்டு ஆகியும்கூட இன்றுவரை பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை. தொடர்ந்து மின் வெட்டினால் பிரச்சினை. இன்றைக்கு நிலவி வருகின்ற குடிநீர்ப் பிரச்சினை, ******

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் கேள்வி நேரத்தில் கேள்விதான் கேட்க வேண்டும். குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. சொல்லுங்கள், கேள்வியை மட்டும் கேளுங்கள்.*

திரு. கே.பி.பி. சாமி: *ஆகவே, மக்களுடைய அவதியைப் போக்குகின்ற வகையிலே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, திருவொற்றியூர் மக்களுக்கு நிரந்தரமாக தடையின்றி மின்சாரம் கிடைப்பதற்கு வழிவகை செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 4 மணி நேரம், 5 மணி நேரம் மின்சாரம் இல்லை என்று சொன்னார்கள். அப்படி இல்லை. ஒரு வார காலமாக என்ன பிரச்சினை என்றால், உயர்*

**** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.***

[2019 ஜூலை 3

மின்னழுத்த கோபுரத்திலிருந்து வருகின்ற insulator–ல் வெடிப்பு ஏற்பட்டது. அங்கே இருக்கின்ற Oil Mill–லிலிருந்து புகைமண்டலம் வந்தது; அது படிந்து சிறிதாக வெடிப்பு ஏற்பட்டது. அதைக் கண்டுபிடிப்பதற்கே கிட்டத்தட்ட 2 நாட்கள் ஆகிவிட்டன. அதனால் தடங்கல் ஏற்பட்டது. அதைக் கண்டுபிடித்து, உடனடியாக அதை மாற்றம் செய்து, hot water wash என்று சொல்லக்கூடிய method–ல் சீரமைப்புப் பணிகள் செய்ததற்குப் பிறகு இப்போது எந்தப் பிரச்சினையும் இல்லை.

முற்பகல் 10–30

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இன்று காலை முதல் மாலை வரை மின்சாரம் அங்கு இருக்காது என்று சொன்னதாகச் சொல்லியிருக்கின்றார்கள். இன்றையதினம் பராமரிப்பு பணிகளுக்காக மின் விநியோகத்தை நிறுத்தியிருப்பார்கள். அதுகுறித்து எல்லோருக்கும் message கொடுத்திருப்பார்கள். மின் விநியோகத்தை எப்பொழுது நிறுத்துகிறோம், எப்பொழுது கொடுக்கிறோம் என்பதை அந்தந்தப் பகுதி வாடிக்கையாளர்களுக்கு செல்போன் மூலமாக நாங்கள் message கொடுத்துவிடுகின்றோம். இன்று பராமரிப்புப் பணிக்காக நிறுத்தியிருப்பார்கள் என்று நினைக்கின்றேன். காலை முதல் மாலை வரை மின்சாரம் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். இன்று பராமரிப்புப் பணிக்காக நிறுத்தியிருப்பார்கள் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சார கேபிள்களைப் பொறுத்தவரையில், அவற்றை போட்டு 20 ஆண்டுகள் ஆகிவிட்டன; அதனால் அவற்றை மாற்ற வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். நாளையதினம் இதுகுறித்து விளக்கமாகச் சொல்கிறேன். தற்போது என்ன நிலைமை என்றால், சாலைகளிலே வெவ்வேறு துறைகளின்கீழ் பணிகள் நடைபெறுகின்றன. அந்த நேர்வுகளில், எங்களது மின்சாரத் துறைக்குத் தெரிவிக்காமல், சில துறைகள் பணிகளை மேற்கொள்ளும்போது, ஏதாவது ஓரிடத்தில் கேபிள்களில் பாதிப்பு ஏற்பட்டுவிடுகின்றது. சில இடங்களில் கேபிள்களை Corporation மூலமாகப் பதிக்கின்றார்கள்; Telecom துறையிலிருந்து பதிக்கின்றார்கள்; தனியார்கள் பதிக்கின்றார்கள். அப்போது கேபிள்களில் பாதிப்பு ஏற்படுகின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையில், எந்த இடத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதைக் கண்டறிந்து, அதைச் சரிசெய்வதற்கு காலதாமதம்

2019 ஜூலை 3]

ஏற்படுகிறதேயொழிய, மின்சாரம் வழங்குவதில் பிரச்சினை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாளையதினம் எனது துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது, திருவொற்றியூர் தொகுதியில் எந்தெந்த நேரத்தில், எவ்வளவு நேரம், எதனால் மின்சாரம் நிறுத்தப்பட்டது என்பதையெல்லாம் உறுப்பினர் அவர்களுக்குத் தெளிவாக, விளக்கமாகச் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*

டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம், ஆலங்குளம் மின்சாரப் பகுதியில், முக்கியமாக ஆலங்குளம் ஒன்றியத்திற்குட்பட்ட நல்லூர் ஊராட்சி, குறிப்பன்குளம் ஊராட்சி, மாயமான்குறிச்சி ஊராட்சி ஆகிய மூன்று ஊராட்சிகளில் ரைஸ் மில்களும்,* coir mattress *தயாரிக்கும் தொழிற்சாலைகளும் அதிகமாக இருக்கின்றன. நல்லூர் ஊராட்சியில் முழுமையாக மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது. ஆனால், குறிப்பன்குளத்திலும், மாயமான்குறிச்சிக்குட்பட்ட குருவன்கோட்டை என்ற இடத்திலும் மும்முனை மின்சாரம் சரியாக வழங்கப்படாததால், சிறு, குறு தொழிற்சாலைகளான ரைஸ் மில்களுக்கும், கயிறு தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கும் மின்சாரம் சரியாகக் கிடைக்கவில்லை என்று பெரிய அளவில் மக்கள் என்னிடம் வந்து கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எனவே, தயவுசெய்து அதை ஆராய்ந்து, குருவன்கோட்டைக்கும், குறிப்பன்குளம் ஊராட்சிக்கும் முழுமையாக மும்முனை மின்சாரம் வழங்கிடுமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் பார்க்கும்போது, அவர் கூறிய பகுதி விவசாயத்துடன் இணைந்த பகுதியாக இருக்கும் என்று நினைக்கிறேன். நல்லூர் ஊராட்சியில் பிரச்சினை இல்லை; மற்ற ஊராட்சிகளில் பிரச்சினை இருக்கின்றது என்று சொல்வதைப் பார்த்தால், விவசாயத்திற்காக பயன்படுத்துகின்ற* transformer–*லிருந்து ரைஸ் மில்களுக்கு*

மின்சாரம் சென்று கொண்டிருக்கிறது என்று நினைக்கின்றேன். ஆக, விவசாயத்திற்காக 9 மணி நேரம் மின்சாரம் கொடுப்பது போக, இருமுனை மின்சாரம் கொடுக்கின்றபோதுதான் இதுபோன்ற பிரச்சினைகள் வருகின்றன. ஒரு சில இடங்களில் இதுபோன்ற பிரச்சினைகள் இருக்கின்றன. அதை ஆய்வு செய்து, செலவு அதிகமானாலும், தனி feeder *போடுவதற்கும், தனி* transformer *போடுவதற்கும் உரிய முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டிருக்கின்றோம். எனினும், எப்படியாவது செய்து கொடுக்க வேண்டுமென்றுதான் நாங்களும் நினைத்துக் கொண்டிருக்கின்றோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

24—

இணைப்புச் சாலை

***8604—திரு. வி. ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, பூதங்குடி ஊராட்சி, பூதங்குடி முதல் நெய்வாசல் வரை இணைப்புச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதி, பூதங்குடி ஊராட்சி, பூதங்குடி முதல் நெய்வாசல் வரை இணைப்புச் சாலை நடப்பு